13009/மஅதி2/16

<u>சுருக்கம்</u>

வாகனம் – நீலகிரி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை பெருந்தலைவர்/மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் அலுவலக பயன்பாட்டிற்கு புதிய வாகனம் அரசின் முன்னனுமதி பெறாமல் வாங்கியது – பின்னேற்பாணை வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மஅதி.2) துறை

அரசாணை(ப) எண். 188 நாள்: 27. 04.2018

<u>படிக்கப்பட்டவை:</u>

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடிதங்கள் ந.க.எண்.53209/2012/ஜி2, நாள் 18.6.2016 மற்றும் 27.12.2017.

-----

<u>ஆணை:</u>

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் மேலே படிக்கப்பட்ட கடிதங்களில் நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர்/பெருந்தலைவரின் அலுவலக பயன்பாட்டிற்கு புதியதாக வாகனம் Mahindra XUV 500 ரூ.16,24,980/– மதிப்பீட்டில் வாங்கிட அனுமதி கோரி கருத்துரு அரசுக்கு அனுப்பப்பட்டது. அக்கருத்துருவினை பரிசீலித்து, மாவட்ட ஆட்சித் தலைவர்/பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நீலகிரி மாவட்டம் அவர்களுக்கு புதிய வாகனம் வாங்குவது குறித்து ஆட்சி மன்ற குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மான நகலினையும் மற்றும் அரசாணை(நிலை) எண்.1229, உள்(போக்குவரத்து–4) துறை, நாள் 21.12.2006ல் குறிப்பிட்டுள்ளபடி தகுதியான வாகனத்தை குறிப்பிட்டு திருத்திய கருத்துருவினை அனுப்பி வைக்குமாறு அரசில் கேட்டுக்கொள்ளப்பட்டது. இந்நிலையில், 12.9.2014 நாளிட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்/பெருந்தலைவர், நீலகிரி அவர்களின் நடவடிக்கையில் SCORPIO MH LX என்ற புதிய வாகனம் வாங்கிட தொகை ரூ.9,96,269/– CAI, Industries Private Limited என்ற நிறுவனத்திற்கு விடுவித்து உத்தரவிடப்பட்டுள்ளது. அரசின் அனுமதி பெறப்படாமல் புதிய வாகனம் வாங்கப்பட்டதற்கும், மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட வாகனத்திற்கு பதிலாக வேறு வாகனம் வாங்கியதற்கும் உரிய விளக்கம் அளிக்குமாறு நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கோரப்பட்டதென ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

2. நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தனது கடிதத்தில் நீலகிரி மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டப் பணிகளை நேரில் ஆய்வு செய்யவும் மலைப் பகுதியில் வெகு தூரத்தில் வசிக்கும் பழங்குடியினர், ஆதி பழங்குடியினர் மக்களுக்கு அடிப்படை வசதிகளை செய்து கொடுக்கவும், அங்கு நடைபெறும் பல்வேறு வளர்ச்சிப் பணிகளை ஆய்வு

செய்யவும் உரிய வாகன வசதி இல்லாத காரணத்தால் ஆய்வு பணிகளை மேற்கொள்ளும் பொழுது மிகவும் சிரமமான ஒன்றாக உள்ளதால், அம்மலை மாவட்டத்தில் சாலைகளின் தன்மையினை கருத்தில் கொண்டு அதனடிப்படையில் Mahindra XUV 500 என்ற வாகனமே முற்றிலும் உகந்ததாக இருந்த காரணத்தினால், அவ்வாகனத்தினை நீலகிரி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் பெருந்தலைவருக்கு வாங்கிட உரிய அனுமதி கேட்கப்பட்டது எனவும், 16.08.2014 அன்று நடைபெற்ற நீலகிரி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் ஆட்சி மன்றக் குழு கூட்டத் தீர்மான எண்.22ன்படி மாவட்ட ஆட்சித் தலைவர்/பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களுக்கு புதிய Scorpio வாகனம் வாங்க அங்கீகரித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது எனவும், அதன்படி, அரசின் ஒப்புதலை எதிர்நோக்கி நீலகிரி, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணைகளின்படி, மாவட்ட ஆட்சியர்/பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்கள் பல்வேறு திட்டப் பணிகளை ஆய்வு செய்வதற்காக SCORPIO MH LX வாகனம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் நிர்வாக செலவினத்திலிருந்து ரூ.9,96,269/–க்கு Mahindra & Mahindra நிறுவனத்திடமிருந்து வாங்கப்பட்டு தற்பொழுது பயன்பாட்டில் உள்ளது எனவும் விளக்கம் அளித்துள்ளார். மேலும், மேற்படி வாகனம் வாங்கப்பட்டதற்கு பின்னேற்பு ஒப்புதலை அரசிடமிருந்து பெற்று வழங்குமாறு நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொண்டுள்ளதாகத் தெரிவித்து, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அரசுக்கு செயற்குறிப்பினை அனுப்பியுள்ளார்.

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் செயற்குறிப்பினை அரசு கவனமாக ஆய்வு செய்தது. ஆய்விற்குப்பின் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் பரிந்துரையினை ஏற்று, பிற்காலத்தில் இதுபோன்ற தவறுகள் ஏற்படக்கூடாது என்ற நிபந்தனைக்குட்பட்டு அரசின் அனுமதி பெறப்படாமல் நீலகிரி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, பெருந்தலைவர்/மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் பயன்பாட்டிற்கு SCORPIO MH LX வாகனம் ரூ.9,96,269/–க்கு வாங்கப்பட்டதற்கு பின்னேற்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஹன்ஸ் ராஜ் வர்மா,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை – 15.
மாவட்ட ஆட்சித் தலைவர் / பெருந்தலைவர்,
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நீலகிரி.

நகல்
நிதி (ஊ.வ) துறை, சென்னை – 9.
உள்(போ.வ.4)துறை, சென்னை–9
உதிரி / இருப்பு கோப்பு.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

27/4/2018

பிரிவு அலுவலர்
27.4.18